சி.சி. எண். 22/2015 சாட்சி. திரு.கிருஷ்ணன்

அ.சா -4 13.08.2019

மு.விசாரணை.

நான் ஓமலூர் வட்டம், பச்சனம்பட்டி, கருப்பண்ணம்பட்டியில் வசித்து தறி ஓட்டும் வேலை செய்து வருகிறேன். என்னிடம் காட்டப்படும் பார்வை மகஜாில் உள்ள முதலாவது உள்ள கையொப்பம் என்னுடையது தான். சுமார் 4 வருடத்திற்கு முன்பு வீரமுத்து வீட்டில் திருட்டு போய்விட்டதாக சொல்லி நானும், எனது மாமா மகன் விஜயன் இருவரும் பகல் 11 மணிக்கு மேல் சென்றிருந்தோம். அப்போது அங்கு போலீசார் வந்து சம்பவ இடத்தை பார்வையிட்டு பார்வை மகஜர் மற்றும் மாதிரி வரைபடம் தயார் செய்தார்கள். அந்த பார்வை மகஜாில் போலீசார் எங்களை சாட்சியாக இருக்க கேட்டு கொண்டதின் போில் நானும், விஜயனும் கையொபபம் செய்தோம். அந்த பார்வை மகஜர் அ.த.சா.ஆ.2.போலீசார் என்னை விசாாித்தார்கள்.

எதிாி தரப்பில் குறுக்கு விசாரணை.

எனக்கு அ.சா.1 தொிந்தவர் மற்றும் வயதானவர் என்பதால் புகார் கொடுக்க நான் அவருடன் காவல் நிலையம் க சென்றிருந்தேனா என்றால் இல்லை. சம்பவ இடத்திற்கு தான் சென்றேன். நான் எழுதாதா வெள்ளை தாளில் கையொப்பம் செய்தேனா என்றால் இல்லை. எழுதி கொண்டு தான் கேட்டார்கள். அதில் என்ன எழுதியிருந்தது என்று எனக்கு தொியாது என்றால் சாிதான். நான் சம்பவ இடத்தில் வரைபடம் வரையும் போது இல்லை என்றாலும், போலீசார் கேட்டு கொண்டதற்கு இணங்க பொய்சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சாியல்ல.

மறு விசாரணை. இல்லை.

ஓம்/-கிருஷ்ணன்
ஓம்/-டி.மாலதி,
குற்றவியல் நீதித்துறை நடுவர்,
ஓமலூர்.